# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | C.C. No.5/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | .ம.சா.2 |
| Name | : | . ஜெகதீஷ் |
| Father’s Name | : | . |
| Village | : | . |
| Taluk | : | . |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 22 .07.2025.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் பஞ்சாப் வங்கி வந்தவாசி வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் மனுதாரர் பாலு எங்கள் வங்கியின் வாடிக்கையாளர் ஆவார். மேற்படி மனுதாரர் பாலு 01.04.2023ம் தேதி ஸ்டேட் பேங்க் ஆப் இந்திய அச்சிரப்பாக்கம் கிளையில் எங்கள் வங்கியில் 16.06.2023ம் தேதி வசூலுக்காக

தாக்கல் செய்தார். மேற்படி காசோலை அவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்திற்காக 17.06.2023ம் தேதி திருப்பப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கில் என்னை சாட்சி சொல்ல யார் அழைத்தார்கள் என்றால் புகார்தாரர் அழைத்ததன்பேரில் வந்துள்ளேன். மனுதாரர் காசோலை தாக்கல் செய்த சமயத்தில் நான் வங்கியில் பணியில் இல்லை. நான் வங்கியில் உள்ள ஆவணத்தின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். காசோலை 2 லட்சம் என்றால் சரிதான். மனுதாரருக்கு எங்கள் கிளையில் எத்தனை கணக்குகள் உள்ளது என்றால் ஒரே ஒரு கணக்குதான் உள்ளது. மனுதாரரின் வங்கி கணக்கு என்ன வகையானது என்றால் சேமிப்பு கணக்கு வகையாகும். காசோலை எப்போது திருப்பப்பட்டது என்றால் 17.06.2023ம் தேதி திருப்பப்பட்டது. மனுதாரர் எத்தனை ஆண்டு காலமாக எங்கள் வங்கியில் வாடிக்கையாளராக உள்ளார் என்றால் 8 வருடங்களாக வாடிக்கையாளராக உள்ளார். மனுதாரருக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இருப்பது எனக்கு தெரியாது.